பதிவு அஞ்சல்/ஒப்புகை அட்டையுடன்

| அனுப்புனர் | பெறுநர் |
|---|---|
| கூடுதல் காவல் கண்காணிப்பாளர், | செல்வி. அ. அமிர்தவள்ளி, |
| (பொறுப்பு) பொது தகவல் அலுவலர் / | சட்டையம்பட்டி (கிராமம்), |
| காவல் கண்காணிப்பாளர், | பொய்யப்பட்டி (அஞ்சல்), |
| தமிழ்நாடு சீருடைப் பணியாளர் | அரூர் (வட்டம்), |
| தேர்வுக் குழுமம், சென்னை - 2. | தருமபுரி (மாவட்டம்) - 636 906. |

ந.க.எண் : ஆர்-3 / 4813 / 2013, நாள் : 23.12.2013

அம்மையீர்,

பொருள் : த.நா.சீ.ப.தே.குழுமம் - தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 - அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்ககம் மூலம் நடத்தப்படும் Pre-Foundation Programme படிப்பானது இரண்டாம் நிலைக் காவலர்கள் தேர்வுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையதா என்பது தொடர்பாக தகவல்கள் கோரியது - பதில் அனுப்புவது - தொடர்பாக.

பார்வை : தங்களது தகவல் அறியும் உரிமைச் சட்ட மனு நாள் 07.12.2013.

<<<>>>

பார்வையில் காணும் தங்களின் தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவில், கோரியுள்ள தகவல்களுக்கு கீழ்க்கண்டவாறு பதில் அளிக்கப்படுகிறது.

| வ.எண். | கேள்வி | பதில் |
|---|---|---|
| 1. | நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்ககம் மூலம் Pre-Foundation Programme படிப்பை டிசம்பர் 12-ல் முடித்துள்ளேன். இந்த படிப்பானது தமிழ்நாடு அரசுத் தேர்வு துறையால் வழங்கப்படும், பத்தாம் வகுப்பு தேர்ச்சிக்கு இணையானது, என அண்ணாமலைப் பல்கலைக் கழகம், RTI கடிதத்தின் மூலம் அரசு தேர்வுக் துறைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் நான் இனிவரும், இரண்டாம் நிலை (Gr.II.PC) காவலர்கள் தேர்வுக்கு விண்ணப்பிக்க கல்வித் தகுதியுடையவரா? | செயலாளர், அண்ணாமலை பல்கலைக் கழகம் அவர்கள், துணை செயலாளர், அரசு தேர்வு இயக்ககம், சென்னை அவர்களுக்கு அனுப்பிய கடிதம் எண். DDE/S/314/2010-2011, நாள் 01.06.2011-ல், அண்ணாமலை பல்கலைக்கழக இயக்குனரகத்தால் நடத்தப்படும், Pre-Foundation படிப்பை, 10 ஆம் வகுப்புக்கு இணையாக கருத கோரியுள்ளது. இது தொடர்பான ஆணை ஏதும் இக்குழுமத்தில் கிடைக்கப்பெறவில்லை. எனவே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்ககம் மூலம் நடத்தப்படும் Pre-Foundation படிப்பை, இரண்டாம் நிலை (Gr.II.PC) காவலர்கள் தேர்வுக்கு விண்ணப்பிக்க போதுமான கல்வித் தகுதியாக கருத இயலாது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது. |

www.kalvikural.com

| | | |
|---|---|---|
| 2. | TNUSRB ஆல், இரண்டாம் நிலைக் காவலர்கள் தேர்வுக்கு வழங்கிய, தகவல் சிற்றேட்டில் கல்வித் தகுதியானது பத்தாம் வகுப்பு தேர்ச்சி (அ) அதற்கு இணையான படிப்பில் தேர்ச்சி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, TNUSRB-யால் அங்கீகரிக்கப்பட்ட, பத்தாம் வகுப்பிற்கு இணையான படிப்புகள் எவையெவை என தகவல் அனுப்புக. | கீழ்காணும் தேர்வுகளில் ஏதேனும் ஒன்றில், தேர்ச்சி பெற்றிருந்தால், அது பத்தாம் வகுப்பு தேர்ச்சிக்கு இணையானதாக கருதப்படுகிறது.<br>1. Secondary School Leaving Certificate Examination (SSLC)<br>2. Oriental School Leaving Certificate Examination (OSLC)<br>3. Anglo Indian School Leaving Certificate Examination (AISLC)<br>4. Matriculation examination conducted in Tamil Nadu at the end of the X standard<br>2) மேலும், பிற கல்வி நிறுவனங்கள் / பல்கலைக் கழகங்களால் நடத்தப்படும் Pre-Foundation Course படிப்பானது, பத்தாம் வகுப்பு தேர்ச்சிக்கு இணையானது என அரசு ஆணை பெறப்பட்டால், அது பத்தாம் வகுப்பிற்கு இணையானதாக கருதப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது. |

23/12/13

கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
(பொறுப்பு) பொது தகவல் அலுவலர்/
காவல் கண்காணிப்பாளர்

23/12

www.kalvikural.com